★ வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில்

# அனுமதியின்றி ஆட்களை கைது செய்யும் படையினருக்கான அதிகாரம் நீக்கம்

இராணுவத்தினரோ, பொலிஸாரோ அனுமதிப்பத்திரம் இன்றி ஆட்களைக் கைது செய்யும் அதிகாரம் இன்று முதல் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நீக்கப்படுகிறது. படையினருக்கு இதுவரை இருந்த இந்த அதிகாரத்திற்கான அவசரகால சட்டப் பிரிவு இன்று முதல் நீக்கப்படுவதற்கான உத்தரவை ஜனாதிபதி பிரேமதாஸ விடுத்துள்ளார். உள்ளூராட்சித் தேர்தலின்போது வாக்காளர்கள் கட்டுப்பாடு உணர்வின்றி வாக்களிக்கின்றோம் என்ற உணர்வை ஏற்படுத்தவே இந்த அவசரகாலச் சட்டப்பிரிவு நீக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே கட்சிகள் பிரசாரம் தொடர்பாக இருந்த சில அவசரகாலச் சட்டப்பிரிவுகள் ஜனாதிபதியால் நீக்கப்பட்டு விட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 = 50

# முரசொலி

முரசு 05 ஒலி 157 பிரசோற்பத்தி சித்திரை 21 (04-05-1991) சனி


# வவுனியாவில் கடும் மோதல்கள்

# பரவலாக விமானக் குண்டு வீச்சு

## ஓமந்தை நோக்கி ஷெல் தாக்குதல்

வவுனியா வடக்குப்பகுதியில் கடும் மோதல்கள் இடம் பெறுகின்றன- இதேவேளை படையினருக்கு உதவியாக விமானங்களும் கடும் தாக்குதல் நடாத்தின.

இறம்பைக்குளம், பன்றிச் செய்தகுளம், ஓமந்தை, நொச்சிமோட்டை, பறநாட்டான் கல்பேயாடி, கழாங்குளம் புதுக்குளம், சாலிதிரிகழாங்குளம் பகுதிகளில் கடுமையான விமானத்தாக்குதல்கள் இடம் பெற்றன.

இரு பொம்மர்கள், இரு ஹெலிகப்டர்கள், வை- 12, அவ்ரோ என்பன இங்கு தாக்குதல்களில் ஈடுபடுகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓமந்தையில் இடம்பெற்ற

— 4 ஆம் பக்கம் பார்க்க

## புளியங்குளத்தில் குண்டு வீச்சு

### 5 வயதுச் சிறுமி பலி; பலர் காயம்

வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை, புளியங்குளம் பகுதிகளில் நேற்று முன் தினம் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

புளியங்குளம் 127 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலினால் எஸ். ராஜினி என்ற ஐந்து வயதுச் சிறுமி உடல் சிதறிப் பலியானார்.

விஜயமலர்(12), முத்தையா(50), கே. கிருஷ்ணசாமி(40) ஆகியோர் காயமடைந்தனர்.

நேற்றும் வவுனியா மாவட்டத்தில் பரவலாக விமானத் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. (70)

## மணலாறு குண்டு வீச்சினால் பொதுமக்களின் வீடுகள் சேதம்

மணலாறு மாவட்டத்தில் வை- 12 இராட்சத விமானம் அவ்ரோ, ஹெலி என்பன நடாத்திய தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

குமிழமுனையில் நடந்த குண்டுவீச்சில் நான்கு வீடுகளும் கடைகளும் சேதமடைந்தன. செம்மலையில் ஏழு வீடுகளும் சேதமடைந்தன. 71

## ஷெல் தாக்குதல்

நேற்று முன்தினம் காலை புன்னாலைக்கட்டுவன் இராணுவ காவலரணில் இருந்து படையினர் ஷெல் தாக்குதல் நடாத்தினர். காவலரண்களை நோக்கி விடுதலைப் புலிகளும் அருள் - 89 தாக்குதலை இரு தடவை மேற்கொண்டனர். 71

## வயோதிபப் பெண்களிடம் படையினர் திருட்டு

திருமலை 62ம் கட்டை இராணுவத்தினர் கைமுந்தான் என்ற கிராமப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

படையினர் வரவையறிந்த மக்கள் அக்கிரமத்தை விட்டு தப்பியோடி விட்டனர். எனினும் தப்பியோட முடியாத வயோதிபப் பெண்களிடம் படையினர் அவர்கள் அணிந்திருந்த நகைகளை பறித்தெடுத்துச் சென்றுள்ளனர். 71

## வீரமரணம்

நேற்று முன்தினம் மூலைத்தீவு இராணுவத்தினருடனான மோதலில் ஜெயக்கொடி (க. இராசவர்மன்) வீரமரணமடைந்தார். 71

## வஞ்சியன் குளத்தில் மேலும்சில ஆயுதங்கள் மீட்பு

கடந்த மாதம் 30 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற மோதலின் பின் மேலும் சில இராணுவ ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

★ ஆர். பி. ஜி. - 1
★ எம். என். சி துப்பாக்கி - 1
★ தொலைத்தொடர்பு சாதனம் - 1
★ ஐ எம். ரவைகள் - 240

இம்மோதலில் 60 படையினர் பலியானது தெரிந்ததே. 71

## கப்பல் கொள்ளையர் மீது தாக்கு படகு கடலில் மூழ்கியது

கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே தரித்து நிற்கும் கப்பல்களில் படகுகளில் சென்று கொள்ளையடித்த ஒரு கோஷ்டி மீது கப்பல் ஒன்றிலிருந்தவர்கள் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கோஷ்டியினரின் வரவை எதிர்பார்த்திருந்த இக் கப்பல்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மடு அகதிகள் முகாமில் நோய்கள் பரவுகின்றன

மடுமாதா தேவாலய அகதி முகாமில் வயிற்றோட்டம், சொப்சசல் போன்றநோய்கள் அதிகரித்து இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சில குழந்தைகள் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

வவுனியா, மன்னார் பகுதி இராணுவ நடவடிக்கைகளால் பெருமளவு அகதிகள் இங்கு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## காமினி மீதான வழக்கு ஜூன் 28-ல் நடைபெறும்

முன்னாள் அமைச்சர் காமினிதிஸநாயக்கா மீதான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 28 ஆம் திகதி கல்கிசை நீதிமன்றத்தில் நடைபெறுமென இரகசியப்பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பேராசிரியர் டிக்ஜன் கடத்தல் தொடர்பாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தீவக அகதிகளுக்கு யாழ் மாநகரசபை உதவி

தீவகத்திலிருந்து வெளியேறிய பதின்மூவாயிரம் அகதிக் குடும்பங்கள் தற்போது குடாநாட்டில் உள்ள பதினான்கு அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பௌசர் மூலம் குடிநீர் வழங்கப்படுவதாகவும், மலசல கூடவசதிகள் செய்யப்படுவதாகவும் சுகாதாரவைத்திய அதிகாரிடாக்டர் ஆர்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## 50 லட்சம் ரூபா மான நஷ்டம் கோரி சுதந்திரக்கட்சி எம். பி. மீது அமைச்சர் லலித் வழக்கு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பியான சி. வி. குணரட்னாவுக்கு எதிராக ஐம்பது லட்சம் ரூபா மான நஷ்டம் கோரி கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

1988 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் திரு. குணரட்னா அமைச்சர் அத்துலத்முதலியை அவதூறு செய்யும் வகையில் பேசியதாக இந்த வழக்கில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வட கிழக்கில் எட்டு மாதங்களில் 7,500 பேரைக் காணவில்லை

இராணுவ நடவடிக்கையை அடுத்து கடந்த ஜூனில் யுத்தம் மூண்டபின் கடந்த எட்டு மாதங்களில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த 7 ஆயிரத்து 500 பேர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இது பற்றிக் கிடைத்த புள்ளி விவரங்களின்படி மட்டக்களப்பில் 1591, அம்பாறையில் 2220, திருமலையில் 1500, வடமாகாணத்தில் 1500 எண்ணிக்கையிலானோர் படையினரால் கைது செய்யப்பட்டுத் தகவல் எதுவும் இல்லாதிருக்கும் மேற்படி விவரம் தொடர்பாக மனித உரிமை ஸ்தாபனங்களின் கவ

— 4 ஆம் பக்கம் பார்க்க

## செயற்கைக் கால் அனுப்ப இராணுவத் தலைமையகம் மறுப்பு

வடபகுதித் தேவைக்கென 200 செயற்கைப் பாதங்களை இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் தொழிற்சாலை கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

இதனை யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் கிளைக்கு அனுப்புவதற்கு கட்டும்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக சனத்தொகையில் அரைப்பங்கினர் பெண்கள்

1991 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி இந்தியாவின் சனத்தொகை 843, 930 861 ஆகும் இதில் 437, 597, 929, ஆண்களாகவும் 406, 332, 932 பெண்களாகவும் இருக்கின்றனர்.

இந்தியாவின் சனத்தொகையில் 42 94 வீதத்தினர் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள். ஆண்களில் 52 68 வீதத்தினரும் பெண்களில் 32.52 வீதத்தினருமே எழுத வாசிக்கக் கூடியவர்கள்.

தமிழ் நாட்டின் ஜனத்தொகை 55, 638, 318 ஆகவும்—இதில் ஆண்கள் 28, 217, 947, ஆகவும் பெண்கள் 27, 420, 321 ஆகவும் இருக்கின்றனர் இச்சனத்தொகையில் ஆண்களில் 63 72 வீதத்தினரும் பெண்களில் 52.29 வீதத்தினருமே எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள். தமிழ் நாட்டின் சனத்தொகை இந்தியாவின் முழுச்சனத்தொகையில் 6 59 வீதமாக அமைந்துள்ளது.

# அரசின் கட்டுப்பாடு இனி இருக்காது கூட்டுறவு மக்கள் மயமாகிறது!

கூட்டுறவு அமைப்பு மக்கள் மயப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவான மசோதா ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அனேகமாக அடுத்த மாதம் முதல் கூட்டுறவு அமைப்பு அரசின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தப்பட்டு அதன் உறுப்பினர்களால் இயங்கச்செய்யப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

புதிய கூட்டுறவு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதும் அரசு அதன் பின்னணியிலிருந்து அபிவிருத்தி வழிமுறைகளை வழங்கி ஆலோசனை தரும் வகையில் மட்டுமே செயற்படும்.

## மீனவர் வீசியவலையை எடுக்கமுடியா நிலை வல்வையில் கடற்படை அட்டகாசம்

வல்வைக் கடலில் கடற்படையினர் நேற்று முன்தினம் மீன்பிடிப் படகுகளைத் தாக்கி அட்டகாசம் புரிந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

கடற்படையினர் மீன்பிடிப் பவர்களின் படகுகளை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் மக்கள் குடியிருப்புக்களை நோக்கிக் கடும் ஆட்லறி ஷெல் தாக்குதலையும் மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்.

இவர்களின் தாக்குதல்களால் பல மீனவர்கள் கடலுக்குச் செல்லாததோடு தொழிலுக்குச் சென்ற மீனவர் சிலர் வீசிய வலைகளை கடலில் இருந்து எடுக்காத நிலையில் கரை திரும்பினர். (39)

## கொழும்பு நோக்கிச் சென்ற 400 லொறிகள் வவுனியாவில் ராணுவத்தால் தடுத்துவைப்பு

கொழும்பு செல்வதற்காக வவுனியாவில் தற்சமயம் சுமார் 400 லொறிகள் தரித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாளொன்றுக்கு 12 லொறிகள் என்ற வீதத்திலேயே கொழும்புக்குப் பயணத்தைத் தொடர ராணுவத்தினர் அனுமதி அளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை வவுனியாவில் இராணுவத்தினருடன் தங்கியுள்ள தமிழ்க் குழுவொன்று கொழும்பு செல்லும் வெற்று லொறிகளுக்கு 3000 ரூபா வீதமும், பொருள்களுடன் வரும் லொறிகளுக்கு 6000 ரூபா வீதமும் பணம் அறவிடுவதாகவும் லொறி உரிமையாளர் ஒருவர் வித்தார். (ப-32)

## முதலுதவி சிகிச்சை நிலையம்

கொக்குவில் மக்கள் நலன்புரிக்கழகத்தால் ஆனைக்கோட்டையில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குத்திறந்துவைக்கப்பட உள்ளது.

இவ்வைபவத்தில் 100 முதலுதவி படித்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மக்கள் நலன்புரிக்கழகத்தால் வழங்கப்படும்.

## பண்டத்தரிப்பு கோட்ட ஆசிரியர் தற்காலிக இடமாற்றம் ஜூலை வரை நீடிப்பு

பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவில் தற்காலிகமாக 30. 4 91 வரை இடமாற்றம் செய்யப்பட்ட சகல ஆசிரியர்களது இடமாற்றங்களும் 31 7. 91 வரை நீடிக்கப்பட்டுள்ளதாகப் பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ப. சண்முகராஜா அறிவித்துள்ளார்.

நாட்டுநிலைமை காரணமாக தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டிருந்த சகல ஆசிரியர்களையும் 30. 4 91 வரை கடமையாற்றிய பாடசாலைகளிலேயே தொடர்ந்து கடமையாற்றுமாறும் அவர் கேட்டுள்ளார். (12)

## சங்கீத செய்முறைப் பரீட்சை

1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட க. பொ. த(சா. த) பரீட்சையில் சங்கீதம் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கான செய்முறைப் பரீட்சைகளை விரைவில் நடாத்துவதற்கான முயற்சிகளை பரீட்சைத் திணைக்களம் எடுத்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பரீட்சையில் ஏனைய பாடங்களுக்குரிய பெறுபேறுகள் வெளியாகி ஒருவருடமாகிவிட்ட போதிலும் செய்முறைப் பரீட்சை நடாத்தப்படாமையினால் சங்கீத பாடத்திற்கான பெறுபேறுகள் இன்னமும் வெளியிடப்படாமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## எண்ணெய்க் கிணறுகள் இன்னும் எரிகின்றன நாளொன்றுக்கு 11/4 கோடி டாலர் இழப்பு

குவைத் மீது சதாம் ஆக்கிரமித்ததினால் குவைத்பெரும் பொருளாதாரப் பாதிப்பை அடைந்துள்ளதாக ஐ. நா. அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

குவைத்தின் எண்ணெய்த் துறை யுத்தத்தினால் 800 கோடி டாலருக்கும் அதிகமான சேதத்தைக் கண்டுள்ளது.

பல எண்ணெய்க் கிணறுகள் இன்னமும் எரிவதால் நாள் ஒன்றுக்கு ஒன்றேகால் கோடி டாலர் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

## காரைநகர் மாணவர்களுக்கு தற்காலிக பாடசாலைகள் ஏற்பாடு

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் கல்வி கற்கவும் கற்பிக்கவும் வசதி செய்து கொடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ப சண்முகராஜா, வடபிரதேச கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கத்துடன் தொடர்பு கொண்டு செய்து வருகிறார்

வெகு விரைவில் காரைநகர்ப்பகுதி மாணவர்கள், ஆசிரியர்களுக்கு பாடசாலைகள் தற்காலிகமாக ஒதுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (12)

## யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தில் 1040 தீவகக்குடும்பங்கள் தஞ்சம்!

இராணுவ நடவடிக்கை காரணமாக தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 1040 குடும்பங்கள் யாழ் அடைக்கலநாயகி ஆலயத்திலும் பாடசாலையிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இங்கு பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதினால் இவர்களில் ஒரு பகுதியினர் தற்போது வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாசாலை இந்துக் கல்லூரி ஆகியவற்றிற்கு தலா நூறு குடும்பங்கள் இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (16, 20)

## சம்பள கட்டுநிதி வந்து சேர்ந்தது

யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் ஏப்பிரல் மாத சம்பளத்திற்காகக் கட்டுநிதி கிடைத்துள்ளது.

இதனையடுத்து சகலகோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் ஆசிரியர்களின் சம்பளத்திற்கான காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ப-10)

## தேக்கம்

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவகப் பகுதியில் பல ப. நோ. கூ. சங்கங்களின் கிளைகளிலும், களஞ்சியங்களிலும் இருந்தும் உணவுப் பொருள்களை மீட்க முடியாமல் உள்ளதாக தெரிய வந்துள்ளது.

## நெல்லியடியில் நாளை மறுதினம் வாஞ்சியின் 'தமிழரின் தாகம்' அறிமுக விழா

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகரும் பிரபல கவிஞருமான மு. வே. யோ. வாஞ்சிநாதனின் "தமிழரின் தாகம்" கவிதை நூல் அறிமுக விழா நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவில் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ் கல்வியதிகாரி ச, சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் வடமராட்சி இணைப்பாளர் சூசை சிறப்புரையாற்றுவார்.

விழாவில் பல அறிஞர்கள் ஆய்வுரை வழங்கவுள்ளனர்.

## சென்னையில் கடும் வெப்பம்! உஷ்ணம் தாங்காமல் ஒருவர் பலி

சென்னையில் கடந்த சில தினங்களாக கடும் வெப்பம் நிலவிவருவதாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் சென்னை கோட்டையில் கடமையிலிருந்த பல்லவன் போக்குவரத்துக்கழக ஊழியர் ஒருவர் கடும் வெப்பம் காரணமாக மயக்க மடைந்து மரணமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.


தெல்லிப்பளை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
**கலந்துரையாடல்**

காலம்: 05 - 05 - 1991, ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணி.

இடம்; சங்கத் தலைமைக் காரியாலயம்.
தலைவர்: திரு. கி. சோமசுந்தரராசா அவர்கள் (சங்கத் தலைவர்)

கலந்துரையாடல் விடயம்

"தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தைப் பாதிக்கும் அண்மைக் காலச் சம்பவங்கள் பற்றி ஆராய்தல்"

சங்கக் கிளைக் குழு, மகளிர் குழு உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தெல்லிப்பளை. சி. முருகையா
03-05-1991, செயலாளர்.
05020 தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்



தமிழீழக் காவல்துறை
**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்**

காவலர்களுக்கான தகைமைகள்:

1. வயது எல்லை 18 வயது முதல் 30 வயது வரை
2. உயரம் 5 அடி 6 அங்குலம்
3. கல்வித்தகைமை எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரணம்) க. பொ. த. (உயர்தரம்) வரை.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 7-5-91 இற்கு முன்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் யாழ் பிரதேசக்காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை
05016



**சிறுவிளம்பரம்**

தேவை
வேப்பம் பூ தேவை மிக்கவைற் யாழ்ப்பாணம். 05019

விற்பனைக்கு
ஒலிவ் கிறாஸ் பவுடர் பாவித்துவாராவாரம்எண்ணெய் முழுகிவர கண், சிரசு, உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. சுக வாழ்வு கிட்டுகிறது பைக்கற் ஒன்று ரூ 1/ 50 மட்டுமே. மிக்கிவைற்-யாழ்ப்பாணம். 05003



**தமிழீழ காவல் துறை பதவி வெற்றிடம்**

1. கணக்கு லிகிதர்

வயது : 25 - 45.

தகைமை: கணக்குத் துறையில் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல்வேண்டும்

2. நிர்வாக உத்தியோகத்தர்

தகைமை: நிர்வாகத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை
05015

# யாழ் மாவட்டத்திற்கு மாற்றம் பெற்ற 56 ஆசிரியர் விவரம் வெளியானது

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற 56 ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள இந்த ஆசிரியர்களின் விவரத்தையும் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் விவரத்தையும் யாழ் கல்வித் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

24 ஆம் திகதியிடப்பட்ட இவர்களது இடமாற்றப் பட்டியலில் 1-5-91 முதல் இந்த இடமாற்றம் அமுலுக்கு வருமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கல்வி அமைச்சு நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பொன்றில் சமீபத்தில் செய்யப்பட்ட இடமாற்றங்கள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (7074)

# விவசாய கைத்தொழில் முயற்சிகளில் சண்டிலிப்பாய் சமூகநிலையங்கள் ஈடுபடும்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம் தமது பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களில் விவசாய, கைத்தொழில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டங்களைத் தயாரித்து யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

இப்பகுதியில் கூல உணவு உற்பத்தி, நல்லெண்ணெய் உற்பத்தி, வாழை நாரிலிருந்து கைப்பணிப் பொருள்கள் உற்பத்தி, சோக்குக்கட்டி தயாரித்தல், தும்புத் தொழில், அப்பளம், பனம் பொருள் தயாரித்தல் போன்ற இல தொழில்முயற்சிகளைக் குறிப்பிட்ட சில சனசமூக நிலையங்கள் மூலம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (13)

# சோவியத் ஜனாதிபதி கோபச்சேவ் கட்சிசெயலர் பதவியைதுறக்கமுடிவு

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் பதவியைத் துறப்பதற்கு ஜனாதிபதி கோபச்சேவ் முன்வந்துள்ளார்.

அறிவிப்பை அவர் விடுத்த போதும், கட்சியின் மத்திய குழு அவர் முடிவை ஏற்றுக்கொள்ள மாட்டாதெனத் தெரிய வருகிறது.

கட்சியில் கடும் போக்கைக் கடைப்பிடிப்பவர்கள் கோபச்சேவின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்ததினாலேயே கோபச்சேவ் இந்த முடிவை எடுத்தார்.

"கட்சிதான் முக்கியம், பதவி அல்ல" என்று கூறிய கோபச்சேவ் "இடைவிடாத கண்டனங்களினால் மனம் சலித்து விட்டது" என்றார்.

★ 15 வருடங்களாக நித்திரையேயில்லை

## இரவுக்கும் பகலுக்கும் இவருக்கு வித்தியாசமேயில்லை!

பங்களாதேஷைச் சேர்ந்த 41 வயதுடைய நசாக் என்பவர் கடந்த 15 வருடங்களாக நித்திரை கொள்ளவில்லையாம்.

அவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இரவுப் பொழுதைக் கழிப்பது மிகவும் கஷ்டமாகத் தெரிந்தாலும் தான் மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாகக் கூறினார்

இரவுக்கும், பகலுக்கும் எனக்கு எதுவித வித்தியாசமும் தெரியவில்லையெனவும் அவர் கூறினார்.

# விநாயகர் அணி வெற்றியீட்டியது

டைமன்ஸ் விபோஸ்ட்ஸினர் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும், பரினா விளையாட்டுக் கழக "பி" பிரிவு அணிக்கும் இடையில் அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் விநாயகர் அணி ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு நடுவராக பி. ஆர். தம்பிநாயகம் கடமையாற்றினார். (16)

# மஹரகமவில் நுண்மவியல் பிரிவு

மஹரகம புற்று நோய் வைத்தியசாலையில் நுண்மவியல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

25 லட்சம்ரூபா பெறுமதியான இந்த நுண்மவியல் பிரிவு கொழும்பு றோட்டறி சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இதனால் பல புற்றுநோயாளர்கள் பயன் பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# கலந்துரையாடல்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற உள்ளது.

இச் சங்கத்தைப் பாதிக்கும் அண்மைக் கால சம்பவங்கள் பற்றி இக் கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-10)

# கடும் நோயாளர் கொடுப்பனவு

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காச நோயாளர்கள், புற்றுநோயாளர்கள், தொழுநோயாளர்கள் ஆகியோருக்கு இவ்வருடம், மாசி மாதங்களுக்கான உதவிப் பணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை இந்த உதவிப் பணத்தைப் பெறாதவர்கள் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தருடன் அமிர்தலிங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (13)

அமைதியை நிலைநாட்ட வந்த இந்தியப்படை அவலத்தையும், அழிவையும் உண்டுபண்ணி அவமானத்தோடு திரும்ப நேர்ந்தது. இதற்கான காரணிகளை இளைப்பாறிய தளபதி சர்தேஷ்பாண்டே ஆராய்கிறார்.

# தமிழர்கள் கேட்டது, கேட்பது தமிழீழம்

இந்திய அமைதிப்படை இலங்கையில் 32 மாதகாலம் இருந்தது. இந்தக் காலகட்டத்தில் அது எவ்வகையில் செயற்பட்டது என்பது பற்றி ஆழ்ந்து ஆராய்வது அவசியம்.

### தமிழர்களை அழித்த கொலையாளிகள்:

இலங்கையில் இந்திய அமைதிப்படை நடந்துகொண்ட விதம் பற்றிப் பல்வேறு மாநிலங்களும், அரசியல் கட்சிகளும், பொது ஸ்தாபனங்களும் கடுமையாக விமர்சித்தன. இதற்குமுன் ஒரு போதும் இந்தியாவின் வெளிநாட்டு விவகாரத்தில் இப்படியான கருத்து முரண்பாடுகளும், அபிப்பிராய பேதங்களும் ஏற்பட்டதில்லை.

தனது கடமைகளைப் புரியப்போன இந்தியப்படை "அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த கொலைப்படை" என்ற அவப் பெயரைக் கேட்க நேர்ந்தது நாட்டின் சரித்திரத்தில் இப்படியான ஒரு நிகழ்வு முன்னெப்பொழுதும் நடந்ததில்லை. அரசியற் குறிக்கோளை அடையும் நோக்கத்துடன் ஒரு சமாதானப்படையை இந்த நாடு முன்னொரு போதும் யுத்தத்தில் ஈடுபடுத்தவில்லை.

### அமைதிப்படையின் தடுமாற்றநிலை:

இந்த இராணுவ நடவடிக்கையினால் 1150 படையினர் கொல்லப்பட்டனர், அதன் இரு மடங்கினர் காய முற்றனர். அது மட்டுமன்றிக் கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டது.

அமைதிப்படையின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டு மக்கள் மனதில் அதிருப்தியையும், அவநம்பிக்கையையும் தோற்றுவித்தன. தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் அமைதிப்படையின் நடவடிக்கைகளைச் சந்தேகக் கண்ணோடு நோக்கின.

அமைதிப்படைக்கே தனது குறிக்கோள் சரிவரத் தெரியவில்லை. படையினர் தெளிவற்ற நிலையில் இருந்தனர். "நாம் எதற்காக இங்கு வந்தோம், எதைச் சாதித்து விட்டோம்" என்றதொரு தடுமாற்ற நிலையை ஏற்படுத்தியது.

அமைதிப்படையின் இராணுவ நடவடிக்கையினால் இந்தியா ஒரு விடயத்தை உணர்த்தியுள்ளது. தனது பாதுகாப்பு நலன்களுக்கு ஆபத்து நேரின் அது இராணுவ பலத்தைப் பிரயோகிக்கத் தயங்க மாட்டாதென்பதே அது.

### அமைதிப்படையின் குறிக்கோள் என்ன?

இந்திய அமைதிப்படையின் செயற்பாடுகளை ஆராயுமிடத்துப் பல ஐயப்பாடுகளும், பல கேள்விகளும் எழுகின்றன;

1. விடுதலைப் புலிகளுக்கெதிரான இராணுவ மோதலைத் தவிர்த்திருக்க முடியாதா?
2. விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் மோதியதால் இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனவா?
3. அப்படியாயின் இது முன் கூட்டியே உணரப்பட்டு அதற்கேற்பத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டனவா?
4. அமைதிப்படையின் குறிக்கோள் என்ன? அதனுடைய இராணுவ நடவடிக்கை இவ்வாறு தான் அமைதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதா?
5. அமைதிப்படை எத்தகைய அரசியற்குறிக்கோளை அடையச் செயற்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது? இராணுவ நடவடிக்கையும் அரசியற் செயற்பாடும் ஒன்றோடொன்று ஒத்துப் போகக் கூடியனவா?
6. வெளிநாடொன்றில் அரசியல் குறிக்கோளை எய்துதற்குரிய சாதனங்கள் அமைதிப் படைக்குக் கொடுக்கப்பட்டனவா?

### திட்டமற்ற செயற்பாடு:

இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருந்த அதேவேளை, இராணுவ நடவடிக்கைகளுக்குப் புறம்பாக அந் நடவடிக்கைகளுடன் தொடர்பற்றனவாக அரசியல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தக் காலகட்டத்தில் மூன்று தேர்தல்கள் நடைபெற்றன, இராணுவ ரீதியில் மோதிய இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் 1989 ஆனிமாதம் கூட்டுச் சேர்ந்தன.

இத்தச் சூழ்நிலையில் இவையாவற்றையும் கருத்திலெடுத்து அமைதிப்படையைச் சரியான முறையில் செயற்படுத்த என்ன திட்டம் வகுக்கப்பட்டது? அமைதிப்படைக்கு எவ்வகையான பணிப்புகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டன?

### இராணுவ நடவடிக்கை:

தமிழர்களின் உரிமைகளைத் தரமறுத்து அவர்களை அடக்கி ஒடுக்கி நசுக்க முற்பட்ட இலங்கை அரசை வன்முறை மூலம் எதிர்த்தவர்களுக்கு இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் சேர்ந்து புகலிடம் அளித்தது எல்லோருக்கும் தெரிந்ததே. அது நியாயமானதும் கூட.

ஆனால் இந்தப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கை தவிர்ந்த வேறு வகைகளில் அணுகக்கூடிய சாத்தியக்கூறு இந்தியாவுக்குத் தென்படவேயில்லையா?

இந்திய அமைதிப்படையை இராணுவ நடவடிக்கையில் ஈடுபட வைத்தது அவசரத்தில் தீர ஆராயாது எடுக்கப்பட்ட முடிவென்றும், புலிகளுடனான இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுமுன் சகல விடயங்களையும் நன்கு பரிசீலித்திருப்பின் அது தோல்வியிலேயே முடியுமென்பதும் புலனாகியிருக்கும்.

### தமிழீழம் இந்தியாவுக்குப் பாதகமா:

இலங்கைத் தமிழர்கள் தமிழீழப் போராட்டத்தில் வெற்றி பெற்றுத் தமிழீழம் கிடைத்து விடின் அது தமிழ் நாட்டிலும் பிரிவினைக்கு வழிகோலுமென முன்னாள் இந்தியத் தாதுவருடன் தொடர்புடையவர்கள் கருதினார்கள். இது இந்திய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்குமென உணரப்பட்டது இக்காரணத்துக்காகப் புலிகளுடனான அமைதிப்படையின் மோதல் நியாயப்படுத்தப்பட்டது.

### குழப்ப மனப்பான்மை:

அமைதிப்படை விவகாரங்களுக்கு யார் பொறுப்பாக இருந்தார்களோ, அவர்களின் செயற்பாட்டில் குறைபாடுகளும், குழப்பங்களும் நிலவியுள்ளன.

இந்தியாவின் அதிமுக்கிய தேசியநலன்கள் எவை என்பதையே அவர்களால் அனுமானிக்க முடியவில்லை.

எந்தப் புலிகளை ஆதரித்து வளர்த்தார்களோ அவர்களுக்கெதிராகவே போரிடும்படி அமைதியைப் பேணப் போன அமைதிப்படையைப் பணிக்குமளவுக்கு இந்தியாவின் தேசிய நலன்கள் பாதிக்கப்பட்டு விட்டனவா?

இலங்கையின் இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற மூன்று தேர்தல்கள் ஏற்படுத்திய அரசியல் மாற்றங்களையும், இலங்கை அரசும் புலிகளும் நேரடிப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதையும் கருத்திலெடுத்து இந்நிகழ்வுகளால் உருவான அரசியல் மாற்றங்களுக்கேற்ப அணுகுமுறையை மாற்றத்தவறி விட்டார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிரச்சினைகளை எப்படி அணுக வேண்டும் என்று தெரியாத குழப்ப நிலையில் அமைதிப்படை விவகாரங்களுக்குப் பொறுப்பானவர்கள் இருந்துள்ளார்கள். இந்தச் சூழ்நிலையில் அமைதிப்படை தொடர்ந்து இலங்கையில் நிலைகொள்ள வேண்டுமென வற்புறுத்தப்பட்டது

எந்த ஒரு குறிக்கோளோ, இராணுவ நடவடிக்கையோ இன்றி இலங்கையில் சகலராலும் வெறுக்கப்பட்ட அமைதிப்படை தொடர்ந்தும் இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டமை விநோதமானது.

### கேலிக்கூத்து:

இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி ஆயுதப் பயிற்சி அளித்தமை. நம்ப முடியாத உறுதியற்ற இக்கும்பலுக்கு ஆயுதம்வழங்கி இராணுவப்பயிற்சி அளித்தது மடத்தனமாகும். இந்த இராணுவப் பயிற்சி இறுதியில் வெறும் கேலிக் கூத்தாக முடிந்தது இவ்விடயத்தில் அமைதிப்படையைக் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. ஏனெனில் அமைதிப்படை மேலிடத்திலிருந்து கிடைத்த பணிப்பையே நிறைவேற்றியது.

### தமிழ் மக்களின் உணர்வை அறியவில்லை:


வடகிழக்கு மக்களின் எண்ணங்களையும், அபிலாஷைகளையும் கவனத்திலெடுக்காது இந்திய அரசும், இலங்கை அரசும் தாங்கள் நடைமுறைப்படுத்துவதுதான் ஜனநாயக முறையான தேர்தல்கள் என்ற நினைப்பாட்டில் இருந்தன.

வடகிழக்கு மக்களை இவ்விடயத்தில் அபிப்பிராயம் கேட்டிருந்தால் அவர்கள் "புலிகள் முற்று முழுதாகப் பங்கு பற்றும் தேர்தலே வேண்டும்" என்று கூறியிருப்பார்கள்.

வடகிழக்குத் தமிழ் மக்கள் மிக நீண்ட காலம் நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து பல கஷ்டங்களையும், துயரங்களையும் அனுபவித்துள்ளார்கள். அவர்களுக்கு என்ன வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். இந்திய அரசு திணித்த தேர்தலிலும், ஜனநாயகத்திலும் அவர்களுக்கு நம்பிக்கையோ,

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ்நகரில் மேதின ஊர்வலத்தின் சில காட்சிகள் (படம்: எஸ். லிங்கம்)



## பங்குனி மாதப் பென்சன் பணமாக வழங்க ஏற்பாடு

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் பங்குனிமாத ஓய்வூதிய வவுச்சருக்கான பணம் திங்கட்கிழமை முதல் வழங்கப்படுமென வங்கியின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இம்மாதம் 7-ஆம் திகதி முதல் சேமிப்புச் சான்றிதழ்கள் விசேட சலுகை என்ற அடிப்படையில் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். ப.11

## பிரிட்டிஷ் உள்ளூராட்சித் தேர்தல் ஆளும் கட்சிக்குத் தோல்வி

பிரிட்டனில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும கன்சர் வேட்டிவ் கட்சி பலத்த தோல்வியை சந்தித்துள்ளது.

869 உள்ளூராட்சி ஆசனங்களுக்காக நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிற் கட்சிக்கு அதிகப்படியான ஆசனங்கள் கிடைத்துள்ளன.

இதனால் பிரிட்டனில் விரைவில் பொதுத் தேர்தல் ஏதும் நடக்கக்கூடிய சாத்தியமில்லை எனக் கருதப்படுகிறது.

## கடற்தொழில் பாதிப்பு

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதிகளில் கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்து வருவதினால் தற்போது ஏற்பட்டுள்ள இறால் சீசன் அப்பகுதி மீனவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையளிப்பதோடு வருவாயையும் குறைத்துள்ளது. (38)

**கப்பல்...**
இப்பந்திகள் பாரமான பொருள்களைத் தூக்கி படகுகள் மீது போட்டதால், ஒரு படகு கடலில் மூழ்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 43

**வடகிழக்கில்...**
மத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது 38

## ★ க. பொ. த. பரீட்சைக்கு ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள்

## இவ்வாண்டு தோற்ற ஏற்பாடு

க. பொ. த உயர் தர விசேட பரீட்சையின் போது யாழ் மாவட்டத்தில் அமுலான ஊரடங்குச் சட்டத்தினால் குறிப்பிட்ட பாடத்திற்கு தோற்றமுடியாது போன பரீட்சார்த்திகளுக்கு 1991 ஆம் ஆண்டு க. பொ. த உயர்தர பரீட்சைக்கு தோற்ற வசதி செய்து கொடுக்கப்படும்.

இதற்கான பரீட்சைக்கட்டணம் எதுவும் இப்பரீட்சார்த்திகளிடம் இருந்து அறவிடப்படமாட்டாது.

இத்தகவலை பிரதேச கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் காரணமாக சில பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றமுடியாத சம்பவம் குறித்து கல்விப்பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## கஸினோ சூதாட்டம் மலேஷியா பிரஜை வெளியேற்றம்

கஸினோ சூதாட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட மலேஷியா பிரஜையான ஹுவார்ட் என்பவர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

ஏற்கனவே சிங்கப்பூர் வாசியான ஜோசிம் என்பவர் இந்த சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு அமைச்சர் ரஞ்சன்விஜேரட்ணவால் நாடு கடத்தப்பட்டார்.

கடந்த மாதமும் இது தொடர்பாக பத்து தாய்லாந்து பெண்கள் உட்பட இருபத்தைந்து பேர் நாடு கடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 43

**வவுனியா...**
குண்டு வீச்சினால் ஏ. பி. சி கட்டிடம் சேதமடைந்தது. ஒருவர் காயமடைந்தார்,

தாண்டிக்குளம் முகாமிலிருந்து நேற்றுக்காலை 5மணியளவில் ஓமந்தை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன. 7 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டுகளை வீசின.

இதேவேளை தோச்சிமோட்டைப் பகுதியில் மோதல்கள் நடைபெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன (71 ப 11)

## ஊர்காவற்றுறை தபாற் கந்தோர்

ஊர்காவற்றுறை தபாலகம் இன்று முதல் யாழ் பிரதம தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கவிருக்கிறது.

ஊர்காவற்றுறை தபாலகப் பிரிவைச் சேர்ந்த மக்கள் தமக்குரிய தபால்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (33)

## மற்றைய தபால் பொதிகள் யாழ் எடுத்து வரப்படும்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு குமண கப்பலில் வந்த யாழ் குடாநாட்டுக்கான 150 தபால் பொதிகள் இன்று யாழ் பிரதம தபாலகத்தினரால் எடுத்துவரப்படும்.

இவை தரம் பிரிக்கப்பட்டு திங்கள் முதல் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 83

## பெப்ரவரி மதிய உணவு முத்திரை விவரங்கள் சேகரிப்பு

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய மதிய உணவு முத்திரை விநியோகம் தொடர்பான வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இப்பிரிவில் உள்ள பாடசாலைகளில் பெப்ரவரி மாதம் சமூகமளித்த மாணவர்களது வரவு விவரத்தினை வகுப்பு ரீதியாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (12)

## அதிபர்கள் கூட்டம்

கல்வித் திணைக்களத்தினால் கடந்த வாரம் கல்விக் கோட்ட ரீதியாக நடாத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கில் கலந்துகொள்ளாதவொரு தணி அதிபர்கள், அதிபர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் / கனகரத்தினம் ம. ம. வி. மண்டபத்தில் கலந்து கொள்ளும்படி கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

## கூட்டம்

யாழ் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக் கூட்டமொன்று இன்று பி. ப. 3-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். 71

## தங்கம் கடத்தல்

குளிர்சாதனப் பெட்டியில் 5 தங்கக்கட்டிகளை கடத்தி வந்த நபர் ஒருவர் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைதானார்.

**செயற்கை...**
படைத் தலைமையலுவலகம் மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் யாழ் அலுவலகம் தொடர்ந்தும் இயங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ப- 11

**சுதந்திரக்கட்சி...**
தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலகெதர நீதிமன்றம் அண்மையில் தீக்கிரையானபோது இந்த வழக்குக் கோவைகளும் எரிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

**மடு அகதி...**
இடம்பெயர்ந்து வருகின்றதால் சுகாதார வசதிகள் பாதிக்கப்படுகிறதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

மடுவில் உள்ள ஆஸ்பத்திரியிலும் போதிய மருந்து வசதிகள் கிடைக்கவில்லை வெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய வெயில் காரணமாக குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் மடுக்குளத்து நீரையே மக்கள் பருகுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33, 70

**காமினி...**
லது தெரிந்ததே,

இது தொடர்பாக மேலும் எட்டுப்பேர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

**தீவக—**
தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

மாநகரசபைச் சிற்றூழியர்கள் இவ் அகதிகளுக்கு பல் வேறுவழிகளிலும் உதவி செய்கிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-11)

**தமிழர்கள் கேட்பது...**
பற்றோ இருக்கவில்லை. அவர்கள் விரும்பாத ஒன்றைத் திணிப்பதற்கு அமைதிப்படைக்கோ இந்திய அரசுக்கோ எவ்வித உரிமையோ அதிகாரமோ இல்லை.

இதில பரிதாபகரமான விடயமென்னவெனில வடகிழக்கு மக்களிடம் ஒருவரும் போகவில்லை, போய் அவர்கள் உள்ளுணர்வைப் புரிந்து கொள்ளவில்லை அப்போதிருந்த இந்தியத் தூதுவர் கூட ஒரேயொரு தடவை யாழ்ப்பாணம சென்றார் 1988 இல் தேர்தலுக்கு முன்பு யாழ் பிரஜைகள் குழுவைச் சந்தித்தார்.

**பகடைக்காய்கள்:**

இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்று நன்கு புரியும். இந்திய அரசு இலங்கைத் தமிழர்களையும், தமிழ் நாட்டுடன் அவர்கள் கொண்டுள்ள மொழி, கலை, கலாசாரம், சமயம் ஆகியவற்றின் தொடர்புகளையும், பிணைப்பையும் அடிப்படையாக வைத்து இலங்கை மண்ணில் அதிகாரம் செலுத்த முனைகிறதென்பதே அது. சுருங்கக்கூறின் அவர்கள் ஒரு பகடைக் காய்களாக இந்திய அரசினால் பயன்படுத்தப்பட்டுள்ளார்களென்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

**பதிலில்லாத கேள்விகள்:**

அமைதிப்படை வடகிழக்கில் செயற்பட்ட முறையை அவதானிக்கும்போதும் பல கேள்விகள் எழுகின்றன.

1. புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களைவதில் ஏன் அமைதிப்படை வெற்றியடையவில்லை?
2. எதற்காக அது கட்டுப்பாட்டை மீறித் தேவைக்கதிகமாகப் பலாத்காரத்தில் ஈடுபட்டது?
3. அப்படிப் பிரயோகிக்கப்பட்ட பலாத்காரத்தின் மூலம் எவ்வகையான பாதுகாப்பை அது உருவாக்கியது.
4. இரண்டரை வருட யுத்தத்தில் பல படை வீரர்களை இழந்தபோதும் எதையாவது சாதித்ததா?
5. எதற்காகத் தமிழ்தேசிய இராணுவத்தை படைப்பயிற்சி கொடுத்து உருவாக்கியது? அதனால் என்ன பலன்கிடைத்தது?

**தன்மானத்தமிழர்:**

கிளர்ச்சியாளர்களுக்கெதிராகப் போரிடும் இராணுவமானது முதலில் மக்களின் நன்மதிப்பையும் அன்பையும் சம்பாதிக்க வேண்டும். மருந்துகளையும் உணவுப் பொருள்களையும் கொடுத்து இவற்றைப் பெறமுடியாது. ஒரு சில பள்ளிக் கூடங்களையும், கோவில்களையும் திருத்திக்கட்டி அன்பைப்பெற முடியாது.

வடகிழக்குத் தமிழர்கள் நன்கு கற்றவர்கள். நல்ல அரசியல் அறிவு உள்ளவர்கள் அதேநேரம் சொல்லொணாத்துயரை அனுபவித்தவர்கள். அவர்கள் ஏமாற்றப்பட்டு, துரோகமிழைக்கப்பட்டு விட்டார்கள்.

இலங்கையில் தன்மானத்தோடு, பெருமையோடு வாழவகை தேடுகிறார்கள். அவர்கள் நியாயபூர்வமான, உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். நியாயபூர்வமான உரிமையைத் தான் கேட்கிறார்கள். இந்த அவர்களுடைய கோரிக்கைகளை, எதிர்பார்ப்புகளை அமைதிப்படையினால் நிறைவேற்ற முடியாது. இந்த விடயம் அனுபவமில்லாத, அறிவில்லாதவனுக்கே புரியும்.

அமைதிப்படையோ அவர்களுடைய பெருமையையும், உணர்ச்சிகளையும், அவர்களுடைய மாவீரர்களையும் எதிர்த்தும் போரிட்டது.

இலங்கையில் அமைதிப்படை செயற்பட்ட முறை, அதற்கான காரணிகள் யாவற்றையும் ஆராய்வது நன்று ஏனெனில் மீண்டும் இப்படியான தவறுகள் ஏற்படாது இருக்க அது வழிவகுக்கும்.

தமிழில்:- வி. பி.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி'பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 04-05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.